# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்ன்ஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 001/நகராட்சி/2017**
**நாள் : 20/02/2018**

**திரு S.P.D. கருப்பையா,**
**காரைக்குடி,**
**சிவகங்கை மாவட்டம் – 630 001** – **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையர்,**
**காரைக்குடி நகராட்சி,**
**சிவகங்கை மாவட்டம்** – **எதிர் மனுதாரர்**

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி, முத்துராமலிங்கத் தேவர் நகர், நான்காவது தெரு, 18 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு S.P.D. கருப்பையா அவர்களின் 02.01.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 04.01.2017 அன்று பெறப்பட்டு 001/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு சம்பந்தமாக நகராட்சி ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் விசாரணையின் போது மனுதாரர் அளித்த வாக்குமூலம் ஆகியன பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி, முத்துராமலிங்கத் தேவர் நகர், நான்காவது தெரு, 18 கதவு எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு S.P.D. கருப்பையா என்பவர், காரைக்குடி நகராட்சி நகர நில அளவை எண்..563/P–இல் 40 செண்ட் நிலத்தில் கட்டப்பட்டிருந்த வீட்டிற்கு தனது சகோதரர் பெயரில் 1995–ஆம் ஆண்டு சொத்துவரி விதிக்கப்பட்டிருந்தது என்றும் ஆனால் எந்தவொரு ஆவணங்களும் பெறாமல் நகராட்சி அலுவலர்கள் மேற்படி வீட்டிற்கான சொத்துவரியினை 2002–ஆம் ஆண்டில் திருமதி நிர்மலா என்பவர் பெயரில் மாற்றம் செய்து தந்துள்ளனர் என்றும், இது சம்பந்தமாக 2009–ஆம் ஆண்டு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த நிலையில் மேற்குறிப்பிட்ட சொத்துவரி பெயர்மாற்றம் ரத்து செய்யப்பட்டது என்றும் பின்னர் ஆணையாளராகப் பொறுப்பேற்ற திருமதி விஜயலட்சுமி என்பவர் ரத்து செய்யப்பட்ட மேற்குறிப்பிட்ட சொத்து வரி விதிப்பினை மீண்டும் புதுப்பித்து தந்ததுடன் குடிநீர் இணைப்பினையும் வழங்கியுள்ளார் என்று தெரிவித்துள்ளதுடன் இதற்கு பல லட்சங்கள் கைமாறியுள்ளன என்றும் மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரிடம் 28.02.2017 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளை உறுதி செய்ததுடன், அக்குற்றச் சாட்டுகளுக்கு பொறுப்பாக செயல்பட்ட நகராட்சி ஆணையாளர்கள் மற்றும் உதவிப் பொறியாளர் மீது நடவடிக்கை எடுக்குமாறு விசாரணையின் போது கேட்டுக்கொண்டார்.

3. முறையீட்டு மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டன. சிவகங்கை மாவட்டம், காரைக்குடி நகர் 563/P நகரளவை எண்ணுள்ள 40 சென்ட் நிலம் மற்றும் அதில் உள்ள கட்டடம் சம்பந்தமான சொத்து வரி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது குறித்து முறையீடு செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட நகர நில அளவை எண்ணுள்ள 40 சென்ட் நிலம் சம்பந்தமாக முறையீட்டு மனுதாரருக்கும் திருமதி S. நிர்மலா என்பவருக்கும் 2006–ஆம் ஆண்டிலிருந்து வழக்குகள் நீதிமன்றங்களில் நடைபெற்று வருவதாக அறிய முடிகிறது. திருமதி S. நிர்மலா என்பவர் 86/2006 எண்ணிட்ட அசல் வழக்கினை காரைக்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். 14.11.2017 அன்று அவ்வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பு திருமதி S. நிர்மலா அவர்களுக்குச் சாதகமாக அமையாத நிலையில், தேவகோட்டை சார்பு நீதிமன்றத்தில் 5/2008 எண்ணிட்ட மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார். காரைக்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் 86/2006–எண்ணிட்ட வழக்கில் வழங்கிய 14.11.2007 நாளிட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பினை நீக்கறவு செய்து தேவகோட்டை சார்பு நீதிமன்றம் ஆணையிட்டுள்ளது. மேலும், தாவா சொத்தில் திருமதி S. நிர்மலா அவர்களின் அமைதியான அனுபவத்தை தடையிடர் செய்வதற்கும் இந்நேர்வின் முறையீட்டு மனுதாரருக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கியுள்ளது. மேற்குறிப்பிட்ட நிரந்தர உறுத்துக்கட்டளை வழங்கிய தீர்ப்பினை எதிர்த்து முறையீட்டு மனுதாரர் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் W.P.(MD)No.8366/2016 எண்ணிட்ட நீதிப்பேராணை மனுவினைத் தாக்கல் செய்துள்ளார். மேற்குறிப்பிட்ட நீதிப்பேராணை மனுவினை பரிசீலனை செய்த மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை 27.04.2016 அன்று கீழ்க்காணும் ஆணையினை வழங்கியுள்ளது :-

> "It is seen that already a second Appeal in a S.A. No.1183 of 2011 is pending in respect of the very same property and the petitioner **(Thiru S.P.D. Karuppiah)** herein is the appellant in the second Appeal. Further, the third respondent **(S.Nirmala)** has filed a suit in O.S.No.205 of 2012 and the same is also pending. Therefore, when civil suits are pending especially the Second Appeal filed by the petitioner is pending for disposal, the parties will abide by the outcome of the Second Appeal. Hence, the writ petition, at this stage, is not entertainable."

4. மேற்குறிப்பிட்ட ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில் முறையீட்டு மனுதாரரின் மனைவி திருமதி K. தனலட்சுமி என்பவரும் வழக்கிடை சொத்துக்கு வீட்டு வரி நிர்ணயம் செய்யும்படி காரைக்குடி நகராட்சி ஆணையருக்கு ஆணையிடவேண்டி W.P.(MD)No.3466/2017 எண்ணிட்ட நீதிப்பேராணை மனுவினை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தாக்கல் செய்துள்ளார். இவ்வழக்கும் நிலுவையில் உள்ளதாகத் தெரியவருகிறது.

5. மேலே குறிப்பிடப்பட்டுள்ள வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்புகள் ஆய்வு செய்யப் பட்டன. காரைக்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், 86 / 2006 எண்ணிட்ட வழக்கில் வழங்கிய

14.11.2007 நாளிட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையினை நீக்கறவு செய்து, 5/2008 எண்ணிட்ட மேல்முறையீட்டில் தேவகோட்டை சார்பு நீதிமன்றம் 28.3.2008 அன்று தீர்ப்பினை வழங்கியுள்ளது. மேற்குறிப்பிட்ட நீதிமன்ற தீர்ப்பிற்குப்பின் சொத்துவரி பெயர் மாற்றம் செய்ய நகராட்சி அலுவலர்கள் கையூட்டு பெற்றுக்கொண்டு போலி ஆவணங்கள் மூலம் சொத்துவரி விதிப்பு செய்துள்ளனர் என்ற முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டிற்கு போதிய ஆதார ஆவணங்கள் எதுவும் சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும், இந்நேர்வில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து குறித்து பல்வேறு வழக்குகள் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ளன. நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும், 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b) –இன் படி இம்முறைமன்ற நடுவம் விசாரணை செய்ய இயலாது. எனவே, இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இந்நிலையிலேயே முடித்துக்கொள்ள முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

**2019**– ஆம் ஆண்டு, **பிப்ரவரி** திங்கள், **20**–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப் படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு S.P.D. கருப்பையா,
   த/பெ துரைச்சாமி சேர்வை,
   18, முத்துராமலிங்க தேவர் நகர் 4ம் வீதி,
   காரைக்குடி,
   சிவகங்கை மாவட்டம் – 630 001.

2. நகராட்சி ஆணையர்,
   காரைக்குடி நகராட்சி,
   சிவகங்கை மாவட்டம் – 630 001

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி